**O.S.No. 174/2012**

**PW2 :** பாவாத்தாள் தேதி 13.10.2025

வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் பிறந்த ஊர் நஞ்சுனாபுரம். நஞ்சுனாபுரத்திற்கும் பெருந்துறைக்கும் இடையில் சுமார் 20 கி மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். என்னை திருமணம் செய்து ஊர் நசியனூர் தொட்டிபாளையம். தொட்டியம்பாளையத்தில் இருந்து பெருந்துறை சுமார் 15 கி மீ தூரம் இருக்கும் என் அண்ணன் பெயர் தங்கமுத்து. நஞ்சுனாபுரத்தில் இருக்கிறார். என் அண்ணன் தங்கமுத்துவின் சொத்து 1ம் பிரதிவாதியின் சொத்துக்கு இணையாக உள்ளது. தங்கமுத்துவின் சொத்து என் அப்பாவின் சொத்து. தங்கமுத்து மீது நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கில் சுப்புலட்சுமி எனக்கு உதவியாக இருந்தார் என்றால் சரியல்ல. என் அப்பா சொத்தின் சர்வே எண் தெரியாது. 12.40 சென்ட் நிலம் என் அப்பாவிற்கு இருந்தது. ஆரம்பத்தில் 15 ஏக்கர் இருந்தது அதில் சிலவற்றை விற்று விட்டார். தற்போது 2.40 சென்ட் உள்ளது. சுப்புலட்சுமி எனக்கு சொந்தம் தான். சுப்புலட்சுமியின் பாட்டனார் ஊர் திண்டல். சுப்புலட்சுமியை குழந்தையில் இருந்தே தெரியும். சண்முகம் வீட்டிற்கு போக்குவரத்து உண்டு. என் கணவர் இறந்து 10 வருடம் ஆகிறது. அதன் பிறகு நான் போனதில்லை. 20 வருடமாக போக்குவரத்து இல்லை என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் நான் போவதில்லை. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் திருவேங்கடமபாளையம் புதூரில் உள்ளது. 9 ஏக்கர் உள்ளது அதை ராமண்ணகவுண்டர் கிரையம் வாங்கியிருந்தார். ராமண்ணகவுண்டர் மாட்டு வியாபாரம் செய்தார் என்றால் எந்த வியாபாரமும் செய்யவில்லை.

ராமண்ணகவுண்டர் மாட்டு வியாபாரமும் தானிய வியாபாரமும் செய்யவில்லை. ராமண்ணகவுண்டர் இறந்து சுமார் 30- 40 வருடம் ஆகிறது. அவருக்கு சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல அவர் சுயமாக சம்பாரித்த சொத்து. நாச்சிமுத்து சொத்து சுயமாக சம்பாதிக்கவில்லை. அவருடைய அப்பா சொத்தை அனுபவித்து வந்தார். அந்த சொத்தில் தான் சுப்புலட்சுமி பாகம் கேட்கிறார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை ஈரோட்டில் வைத்தேன். பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும் சொல்லி கொடுத்தார்கள். யார் சொல்லி கொடுத்தார்கள் என்றால் வழக்கறிஞர் சொல்லி தயாரிக்கப்பட்டது. தங்கமுத்து சொத்தும் சுப்புலட்சுமி சொத்தும் இணையாக உள்ளது சுப்புலட்சுமி சொத்து வழியாக தான் என் அண்ணன் செல்லவேண்டும். சண்முகம் காட்டு வழியாக என் அண்ணன் அவர் காட்டிற்கு போய் வருகிறார் என்றால் சரியல்ல என் அண்ணன் சொத்திலேயே வழி உள்ளது. சண்முகம் காட்டு வழியாக சுப்புலட்சுமி போகவேண்டும் சண்முகம் அதை அனுமதிப்பதில்லை என்றால் சரிதான் தற்போதும் அந்த வழியாக தான் போகிறார். வழி சம்மந்தமாக அவர்களுக்கிடையே விரோதம் என்றால் சரிதான். அதனால் சுப்புலட்சுமிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெளியில் செல்லாமல் உடல் நலம் சரியில்லாமல் இருந்தேன் என்றால் 4 – 5 வருடமாக இருந்தேன். சுப்புலட்சுமியின் வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் செக்கு பந்தி தெரியாது. பஞ்சாயத்து எங்கு நடந்தது யார் யார் அதில் கலந்து கொண்டார்கள் எப்போது நடந்தது என்றால் 2009 ல் திருவேங்கடமபாளையம் புதூரில் நடந்தது. நானும் சுப்புலட்சுமியும் சென்றோம் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் தெரியாது. பொன்னுசாமி அவருடைய மகன் கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டார்கள். மேற்படியார்கள் இறந்து விட்டார்கள். 1, 2 ம் பிரதிவாதிகளுக்கு வருமானம்

இல்லை என்றால் சரியல்ல. நாச்சிமுத்து கவுண்டருக்கு மொத்தம் 14 ஏக்கர் அவர் தந்தை வழி பாத்தியம் உள்ளது. 9 ஏக்கர் திருவேங்கடம்பாளையத்திலும் மற்றும் 5 ஏக்கர் பவளத்தாம்பாளையத்தில் ராமண்ணகவுண்டர் வாங்கியிருந்தார். அந்த திருவேங்கடமபாளையத்தில் உள்ள சொத்தை வைத்து தான் 5 ஏக்கர் வாங்கப்பட்டது. அதில் எவ்வளவு வருமானம் வந்தது என்றால் என்னால் சொல்ல இயலாது. பவளத்தாம்பாளையத்தில் நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் அவருடைய மனைவியும் குடியிருந்தார்கள். நாச்சிமுத்து கவுண்டர் திருவேங்கடம்பாளையத்தில் தான் இறந்தார். தானசெட்டில்மென்ட் எழுதி வைத்திருப்பதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எனக்கு உண்மை சம்பவங்கள் எதுவும் தெரியாது என்றும் சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**( 7 ம் பிரதிவாதி தரப்பில் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தழுவி ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

<u>8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு எழுத படிக்க தெரியாது. யார் என்னை சாட்சிக்கு அழைத்தார்கள் என்றால் வாதி சுப்புலட்சுமி என்னை அழைத்தார். என்ன காரணத்திற்காக சாட்சியம் சொல்ல அழைத்தார் என்றால் அவர் அப்பாவிடம் சொத்து பிரச்சனை என்பதால் அதற்கு சாட்சியம் அளிக்க அழைத்தார். 1, 2 பிரதிவாதிகள் இறந்து விட்டார்கள். வாதி சுப்புலட்சுமி எனக்கு உறவினர். தாவா சொத்துகள் ஆதியில்  யார் பெயரில் ராமண்ணகவுண்டர் பெயரில் இருந்தது.  ராமண்ணகவுண்டருக்கு 9 ஏக்கர் சொத்து இருந்தது. தாவா சொத்து இரண்டு இடத்தில் இருந்தது. நாச்சிமுத்துகவுண்டர் ராமாயம்மாள் கிரையம் வாங்கிய சொத்துகள் எங்கு உள்ளது என்றால் பவளத்தாம்பாளையத்தில்

உள்ளது. 1 , 2 பிரதிவாதிகள் உயிருடன் இருந்த காலத்தில் அவருடைய பேரன் பேத்திகளுக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். சொத்து யார் பெயரில் கிரையம் என்றால் நாச்சிமுத்து பெயரில் இருந்தது. சுப்புலட்சுமிக்கு எதுவும் சொத்து கொடுக்கவில்லை என்பதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பேரன் பேத்திக்கு எழுதி கொடுத்தது போக மீதி சொத்துகள் இல்லை என்பதால் எழுதி கொடுக்கவில்லை. 2009 ல் சுப்புலட்சுமி என்னை பைசலுக்கு அழைத்து சென்றார். நாச்சிமுத்துவிடம் சொத்தில் பங்கு கேட்ட போது பார்க்கலாம் என்று சொல்லிவிட்டார். பேரன் பேத்திகளுக்கு எழுதி வைத்துவிட்டார். சுப்புலட்சுமிக்கு எதுவும் கொடுக்கவில்லை. அதனால் இந்த வழக்கை சுப்புலட்சுமி தாக்கல் செய்துவிட்டார். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க பிரமாண வாக்குமூலம் தயார் செய்து கொடுக்கும்படி சுப்புலட்சுமியிடம் கேட்கவில்லை. நாங்கள் சுப்புலட்சுமிக்காக பங்கு கேட்டு போன போது பங்கு கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்பதை சொல்ல தான் வந்தேன். ராமண்ணகவுண்டருக்கு பாத்தியம் எதுவும் இல்லை என்றும் 1 2 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்றும் அவர்கள் கிரையம் வாங்கிய சொத்து என்றும் அதில் சுப்புலட்சுமிக்கு பங்குரிமை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சுப்புலட்சுமி எனக்கு சொல்லி கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.